**செய்தி வெளியீடு எண்:027** **நாள் : 12.01.2016**

<u>மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் VAO தேர்விற்கு இலவச பயிற்சி</u>

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தமிழ்நாடு சீருடை பணியாளர் வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம், மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் மற்றும் இரயில்வே தேர்வு வாரியம் ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் இளைஞர்களுக்கென இலவச பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தன்னார்வப் பயிலும் வட்டங்களில் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. மேலும், இவ்வட்டங்களில் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கு தேவையான பொது அறிவு புத்தகங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் உள்ளன.

தற்போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் கிராம நிர்வாக அலுவலர் (VAO) பணிக்காலியிடங்களுக்கான ( 813 பணிக்காலியிடங்கள் ) தேர்வு நடத்திட அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வு 28/2/2016 அன்று நடைபெற உள்ளது. இத்தேர்விற்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் இலவச பயிற்சி வகுப்புகள் துவங்க உள்ளன. இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட உள்ளன. இவ்வகுப்பில், முந்தைய தேர்வுகளின் மாதிரி வினாத்தாள்கள் மற்றும் தேர்விற்கான பாடக்குறிப்புகள் வழங்கப்படும். மேலும், வாரம் ஒருமுறை மாதிரி தேர்வு மற்றும் பயிற்சி இறுதியில் மாதிரித் தேர்வுகளும் நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சியில் சேர விரும்பும் இளைஞர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் அணுகி விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**